NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 5 January 2022

# புதிய என்யுஎஸ் கல்லூரியின் முதலாவது கல்வித்துறைத் தலைவர்



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) சட்டத்துறைத் தலைவரான சைமன் செஸ்டர்மன், புதிய என்யுஎஸ் கல்லூரியின் முதலாவது கல்வித்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். யேல்-என்யுஎஸ் கல்லூரியையும் பல்கலைக்கழகக் கல்விமான்கள் திட்டத்தையும் இணைத்து அப்புதிய கல்லூரி உருவாக்கப்பட்டுள்ளது. புதிய பொறுப்பை ஏற்கவிருக்கும் பேராசிரியர் செஸ்டர்மன், சட்டத்துறைத் தலைவர் பதவியிலும் தொடர்வார் என்று பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. கடந்த 2007ஆம் ஆண்டில் இருந்து இவர் என்யுஎஸ் சட்டத்துறையில் பணியாற்றி வருகிறார். அவருக்கு அடுத்து, சட்டத்துறைத் தலைவர் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை தேடும் முயற்சியைப் பல்கலைக்கழகம் தொடங்கி இருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.